## முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை

## EA 70/2016 in EP 01/2016in OS NO 209/2002

**மனுதாரர் தரப்பு சாட்சி-1 ஜேம்ஸ் மைக்கேல் ராஜ் –** திருமதி.எஸ்.கோமதி பெஞ்ச் கிளார்க் அவர்களால் 44/1969 வது பிரிவின் கீழ் பிரமாணம் செய்யப்பட்டு 21.01.2026 ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

**<u>மனுதாரர் தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

1) எனது தகப்பனார் பெயர் பீட்டர் சவுந்தர்ராஜன். எனது தாத்தா பெயர் நாயகம் (எ) பெரியநாயகம் என்றால் சரிதான். எனது பாட்டி பெயர் தோமாயம்மாள். ஜோசப், விக்டர், ராணி, லில்லி மேரி ஆகியோர் எனது தகப்பனாருடன் பிறந்தவர்கள் என்றால் சரிதான். கிருஷ்ணன் என்பவருடன் கிரைய ஒப்பந்தம் போட்டவர்கள் நாயகம் (எ) பெரியநாயகம், பீட்டர் சவுந்தரராஜன், ஜோசப் ஆகியோர்கள். கிருஷ்ணன் மேற்படி கிரைய ஒப்பந்தத்தின்படி கிரைய ஆவணம் ஏற்படுத்தி தர வேண்டும் என்று வழக்கு தாக்கல் செய்தார் என்றால் சரிதான். மேற்படி வழக்கு பற்றி எனக்கு ஆரம்பத்தில் இருந்து தெரியும் என்றால் சரிதான். அந்த வழக்கு கிருஷ்ணனுக்கு சாதகமாக தீர்ப்பாகி விட்டது என்றால் சரியல்ல, நிலுவையில் உள்ளது. உயர்நீதிமன்றத்தில் எனது தகப்பனார் மனுதாக்கல் செய்த விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும்.

2) மேற்படி மனு அசல் வழக்கின் தீர்ப்பை ரத்து செய்வது சம்பந்தமாக தாக்கல் செய்தார் என்றால் சரிதான். எனது தகப்பனாருக்கு நான் உதவியாக இருக்கிறேன் என்றால் சரிதான். எனக்கும், எனது தகப்பனார் மற்றும் அவரது உடன் பிறந்தவர்களுக்கு இடையே எந்த பிரச்சினையும் இல்லை என்றால் சரிதான். நானும், எனது தகப்பனாரும் ஒன்றாக ஒரே வீட்டில் வசிக்கிறோமா என்றால் ஆமாம். எனக்கு உடன்பிறந்தவர்கள் 2 சகோதரிகள், பெயர் லிபியா மற்றும் ரேகா. அவர்களுக்கு சுமார் 10 வருடத்திற்கு முன்பு திருமணம் ஆகிவிட்டது. அவர்களுக்கும், எனக்கும் எந்த பிரச்சினையும் இல்லை என்றால் சரிதான். அவர்களுக்கும், எனது தகப்பனாருக்கும் இடையே எந்த பிரச்சினையும்

இல்லை என்றால் சரிதான். எங்களுக்கிடையே சுமூக உறவுதான் உள்ளது. வழக்கு நடந்த விபரங்கள் ஆரம்பம் முதலே அவர்களுக்கும் தெரியுமா என்றால் தெரியும்.

3) கிருஷ்ணன் வழக்கு தாக்கல் செய்துள்ள விபரம் அவர்களுக்கும் தெரியும். இம்மனு நானும், எனது தகப்பனாரும் சேர்ந்துதான் தாக்கல் செய்துள்ளோமா என்றால் ஆமாம். எனது தகப்பனாரின் உடன்பிறந்தவர்கள் சேர்ந்துதான் இம்மனு தாக்கல் செய்தோமா என்றால் ஆமாம். அமிர்தம் ஆசாரியின் தகப்பனார் பெயர் தெரியுமா என்றால் தெரியாது. அமிர்தம் ஆசாரி எந்த ஊரில் இருக்கிறார் என்றால் கடவூரில் இருக்கிறார். எனது தாத்தாவின் முன்னோர்கள் தளிவாசலில் உள்ள பெரியநாயகி கிறிஸ்தவ ஆலயத்திற்கு சென்று வந்தார்கள். தற்போது நாங்கள் திருச்சி மிளகுபாறையில் உள்ள கிறிஸ்தவ ஆலயத்திற்கு சென்று வருகிறோம். நானும் எனது பாட்டனார் மற்றும் அவரது முன்னோர்களும் கிறிஸ்தவர்கள்தான்.

4) எனது தகப்பனாரும் கிறிஸ்தவர்தான். எனது தகப்பனாரின் உடன்பிறந்தவர்களும் கிறிஸ்தவர்கள்தான். மனு சொத்து சர்வே எண் 560/2 நாயகம் (எ) பெரியநாயத்திற்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். அவர் தனிப்பட்ட முறையில் அனுபவம் செய்து வந்தார் என்றால் சரிதான். அவருக்கு தனிப்பட்ட முறையில்ல மேற்படி சொத்து பாத்தியம் என்றால் சரிதான். அவரும் தனது சொத்து என்ற முறையில்தான் அனுபவம் செய்து வந்தார் என்றால் சரிதான். அவருக்கு பாத்தியப்பட்ட சொத்தைத்தான் கிருஷ்ணனுடன் கிரைய ஒப்பந்தம் செய்தார் என்றால் சரிதான். தற்போது இந்த மனு எதற்காக தாக்கல் செய்துள்ளேன் என்றால், எனது தாத்தாவின் சொத்தில் எனது பாகத்தை கேட்டு தாக்கல் செய்துள்ளேன்.

5) மனு சொத்தில் எனக்கு எந்த பாத்தியமும் இல்லை என்றும், எனது தகப்பனாருக்குத்தான் பாத்தியம் இருந்தது என்றால் சரிதான். எனது தகப்பனார் சொல்லித்தான் இந்த மனு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான்.

நிறைவேற்று மனுதாரராகிய கிருஷ்ணன் வகையறாவை ஏமாற்ற வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில், உண்மையை மறைத்து மற்ற எதிர்மனுதாரர்களுடன் சேர்ந்து பொய்யான சங்கதியுடன் இம்மனுவை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல, இம்மனு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

Taken down by me in open court read over interpreted in the witness and acknowledged by him /her to be correct.

Sd/-R. தமிழரசி
**Principal District Munsif,**
**Kulithalai.**